**அக்டோபர்: 21**

## உயிர்த்தெழுந்த ஆண்டவர் அப்போஸ்தலருக்கு தம்மை வெளிபடுத்தினார்.

**வாசிக்க: யோவான் 20:19-29**

வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப் பட்டார்கள். இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக, பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை. மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என்விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். மறுபடியும் எட்டுநாளைக்கு பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டிக்குள்ளே இருந்தார்கள், தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான், கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.




1) கல்லறையில் கர்த்தரின் சரீரமில்லை.
2) காலையிலே சென்ற ஸ்திரீகள் தேவதூதரை கண்டு ஆண்டவர் உயிரோடெழுந்து விட்டார் என நற்செய்தியை கொண்டு வந்தனர்.
3) மகதலேனா மரியாளும் ஆண்டவரை பார்த்து பேசியதை சொன்னாள்.
இவ்வளவு காரியங்கள் நடந்திருந்தும் ஆண்டவர் வந்து அவர்களை காப்பார் என விசுவாசிக்க முடியவில்லை. ஏனெனில் யூததலைவர்களுக்கு பயம்.
நம்முடைய பலவீனத்தை பார்த்து நம்மை தள்ளிவிடுகிறவரல்ல நம் நேசர். மாறாக பூட்டிய அறைக்குள் பயந்து பதுங்கிகொண்டிருந்த சீடரை சந்திக்க அறைக்குள்ளேயே வந்து பயப்படாதேயுங்கள், உங்களுக்கு சமாதானம் என்று சொன்னார். அங்கே தோமா இல்லை. அவனால் பார்க்காமல் நம்பமுடியாது என அறிந்த ஆண்டவர் அவனுக்காக மறுபடியும் வந்து பலப்படுத்தினார். அது மட்டுமல்ல அவருடைய ஆவியானவர் இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என அறிந்து, ஆவியானவரை அவர்களுக்கு அனுப்பித்தந்தார். இதைவிட அதிகமாக யார் நம்மை நேசிக்கமுடியும். தம் ஜீவனை தந்து நம் பாவத்தை மன்னித்தார். தம் ஆவியானவரையே தந்து வெற்றி வாழ்க்கை வாழ வைத்தார். அவரை உறுதியாக பற்றி கொள்வோமா செல்லங்களா...?

நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அப்போஸ்தலர் 2:38

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, உங்க ஜீவனை தந்து என் பாவத்தை மன்னீத்தீரே நன்றி. உங்க ஆவியானவருடைய பெலத்தில் உமக்கு பிரியமாக வாழ என்னை அர்பணிக்கிறேன். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.



www.THECOLOR.com